# சித்தர்கள் கண்ட ஞானமும் சித்தியும்

71

**பா.ஶ்ரீ நர்மதா & முனைவர் த.நாகம்மாள் (SS)**

**[1]முதுகலை இரண்டாமாண்டு தமிழ் , [2] உதவிப்பேராசிரியர்,**

**தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்**

**உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -- 641 043**

19764naga@gmail.com

**ஆய்வு சுருக்கம்:**

மெய்ஞ்ஞானம் என்பது என்றும் அழியாததும் மற்றும் உண்மை ஞானம் என்றும் பொருள். அது பிரம்மமாய் உள்ளது. பிரம்மம் என்றால் தானாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பது. நாம் காணுகின்ற சூரியன் எங்குமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பது போல ஆன்மாவானது அணுப்பிரமாணமாக நம்முள் ஆயிரங்கோடி சூரியப்பிரகாசமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. "எழுகின்ற ஞாயிறைப் போன்று நின்ற நின்தன்மை" என்று மாணிக்கவாசகப் பெருமான் ஆன்ம ஜோதியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த ஆன்மாவை அறிவால் அறிந்து தன் மயமாக இருப்பதே "மெய்ஞ்ஞானம்' எனப்படும். அதாவது அகங்காரத்தைப் போக்கி, புத்தியின் துணைகொண்டு மனத்துடன் சென்று ஜீவனில் சேர்ந்து தானாக இருக்கும் நிலையாகும்.

**திறவுச்சொல்:** போதனை, மருத்துவம், மெய்ப்பொருள், சித்தவித்தைகள்

**முன்னுரை:**

சித்த வைத்தியம் தமிழ்நாட்டு வைத்தியம் ஆகும். சிறந்த வைத்தியம் சித்தர்கள் கண்டறிந்த வைத்திய முறையே சித்த வைத்தியமாகும். தமிழ்நாட்டு வைத்தியர்களிலே பலர் சித்த வைத்திய முறையைப் பின்பற்றுவோர் ஆவர். சித்தர்கள் பெயரால் வழங்கும் வயித்திய நூல்களைத் தவிர. அறிவைப் புகட்டும் வேறு பல பாடல்களும் வழங்குகின்றன. சிவவாக்கியர் பாடல், பாம்பாட்டிச்சித்தர் பாடல், குதம்பைச்சித்தர் பாடல், இடைக்காட்டுச்சித்தர் பாடல், அகப்பேய்ச்சித்தர் பாடல், அகத்தியர்ஞானம், அழுகணிச்சித்தர் பாடல், கொங்கணர் பாடிய வாலைக்கும்மி, காகபுசுண்டர் ஞானம் முதலிய பலபாடல்கள் இருக்கின்றன.

**புத்தகங்களின் போதனை:**

அறிவே தெய்வம் என்பது ஆன்றோர்கள் கொள்கை ஆகும். அறிவு எல்லா நன்மைகளுக்கும் அடிப்படைத் தேவை ஆகும். எல்லா இன்பத்திற்கும் அடிப்படைத் தேவை அறிவு ஆகும். அறிவினால்தான் இவ்வுலக நாகரிகம் வளர்ந்திருக்கின்றது. அறிவினால்தான், மக்கள் இயற்கைகளையெல்லாம் அடக்கி ஆளும் ஆற்றலை அடைந்திருக்கின்றனர். ஆகவே, அறிவும்

தெய்வமும் ஒன்று. அறிவுதான் தெய்வம், தெய்வந்தான் அறிவு என்று கூறுவர் சித்தர்கள். இதனை "அறிவும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்" என்று திருமூலர் குறிப்பிடுகிறார். அறிவு வேறு, சிவம் என்னும் தெய்வம் வேறு, என்பவர்கள் அறிவற்றவர்கள் என்பதே திருமூலர் கொள்கைஆகும்.

அறிவு என்பது தமிழ்ச்சொல். ஞானம் என்பது வடமொழிச்சொல் ஆகும். அறிவுள்ளவரை அறிஞர், புலவர் என்று அழைப்பர் தமிழர். ஞானம் உள்ளவரை ஞானிகள் என்று அழைப்பர் வடமொழியாளர். ஆகவே, ஞானி என்றாலும், அறிஞர் என்றாலும் கருத்து வேறுபாடு இல்லை. சொல் வேறுபாடு ஒன்றுதான் உண்டு.ஞானத்தைப் பெறுவதற்கு புறத்திலே உள்ள பொருள்களின் இயல்புகளைக் கண்டறிவதும் அறிவுதான். அப்பொருள்களின் பயனைப் பெற்று அனுபவிப்பதற்கு முயல்வதும் அறிவுதான்.

அப்பொருள்களின் தோற்றம், வளர்ச்சி, ஒடுக்கம் முதலியவற்றால் பல படிப்பினைகளை உணர்ந்து கொள்ளுவதும் அறிவுதான். நமது உள்ளத்தால் உணர்ந்து, உண்மைகளைக் கண்டறிய முயல்வது தான் உண்மை அறிவு ஆகும். இந்த உண்மை அறிவை நமக்குள் தான் உணரமுடியும். புத்தகங்களிலே காண முடியாது. ஞான நூல்கள் என்று பட்டை தீட்டிக் கொண்டிருக்கும் புத்தகங்களிலே காண முடியாது. அந்த ஞானம் என்னும் பெரிய ஒளி விளக்கு நமக்குள்தான் இருக்கின்றது. அதை அறிந்துவிட்டால் அமைதியாக வாழ முடியும். அல்லல் இன்றியும், அலைச்சல் இன்றியும் இன்பமாக வாழ முடியும். இந்த உண்மையைச் சிவவாக்கியர் என்னும் சித்தர் தெளிவாகக் கூறுகிறார்.

**"ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்!**
**ஞானமான சோதியை நாடி உள் அறிகிலீர்!**
**ஞானம் ஆகி நின்றது ஓர் நாதனை அறிந்த பின்**
**ஞானம் அல்லது இல்லை வேறு; நாம் உரைத்தது உண்மையே". (சி.பா–444)**

என்பது சிவவாக்கியர் பாட்டு ஆகும். இதிலே ஞானமே கடவுள் என்ற உண்மையை குறிப்பிடுகிறார். அந்த ஞானத்தை நமது உள்ளத்தில் தான் காணவேண்டும் என்றும் குறிப்பிடுகிறார்.

**குதம்பைச்சித்தரின் சிறப்பு:**

குதம்பை என்பது பெண்கள் காதிலே அணியும் ஒரு நகை ஆகும். குதம்பை அணிந்த பெண்ணைக் குதம்பாய்! என அழைக்கிறார் குதம்பைச்சித்தர். இவருடைய பாடல்களில் குதம்பை அணிந்த பெண்ணை, குதம்பாய் என்று முன்னிலைப் படுத்திப் பாடியிருப்பதனால் இச்சித்தருடைய பெயரையே குதம்பைச்சித்தர் என்று வைத்து விட்டனர்.குதம்பைச் சித்தருடைய பாடல்களிலே யோகத்தையும் ஞானத்தையும் புகழ்ந்து பேசுவதைக் காணலாம். இவருடைய பாடல்களும்

எளிதிலே பாடத்தக்க இனிமையான இசைப் பாடல்கள் என குறிப்பிடப்படுகிறது.

**மெய்ப்பொருளின் நிலை:**

''உண்மைப் பொருளை அறிந்து விளங்குகின்ற மெய்ஞானிகள் உடலை வலுப்படுத்தக்கூடிய காயகற்பம் என்னும் மருந்துகூட வேண்டாம், கவலையற்ற அவர்கள் உள்ளமே அவர்களுக்கு நோயற்ற வாழ்வை அளிக்கும், நீண்ட வாழ்நாளை அளிக்கும். உண்மைப்பொருளை அறியாத அஞ்ஞானிகள்தாம் காயகற்பந்தேடி அலைவார்கள்" என்ற கருத்தை குறிப்பிடுகிறார் குதம்பைச் சித்தர். இதனை,

**"மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞானிக்குக்**
**கற்பங்கள் ஏதுக்கடி-குதம்பாய்**
**கற்பங்கள் ஏதுக்கடி". (சி.பா–02)**

என்ற பாடலால் காணலாம். உண்மை ஞானிகள் காயகற்பந் தேடமாட்டார்கள், தேடவேண்டிய அவசியம் இல்லை என்பதை இதன் மூலம் வலியுறுத்தினார்.

**ஞானத்தின்சிறப்பு:**

கடுவெளிச்சித்தர் பாடல் முழுவதும் ஆனந்தக்களிப்பு என்னும் இசைப் பாடலாகும். சிறந்த நீதிகளையும் உயர்ந்த ஞானத்தையும் உணர்த்துகிறது. ."சொல்லுதற்கு அரிய சூது, பொய், மோசம் இவைகளை விட்டொழிக்கவேண்டும். சூதாடினால், பொய் பேசினால், பிறரை மோசம் செய்தால்நம் சுற்றத்தார் அனைவரும் நம்மை வெறுப்பார்கள். நம்மை விரும்புவோர் ஒருவரும் இருக்க மாட்டார்கள். ஆகையால் நல்ல பக்தியும், அன்புமே ஒவ்வொரு நாளும் மனிதர்க்கு நன்மைதரும். ஆதலால் பக்தியையும் அன்பையுமே நேசிக்க வேண்டும்".என்று பாடுகிறார் கடுவெளிச்சித்தர். இதனை

**"சொல் அரும் சூது, பொய், மோசம் – செய்தால்**
**சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும்; நாசம்;**
**நல்ல பக்தி, விசு வாசம் – எந்த**
**நாளும் மனிதர்க்கும் நன்மையாம் நேசம்". (சி.பா–02)**

என்ற பாடலால் காணலாம்.

தீமைகள் செய்தல் கூடாது. பக்தி விசுவாசத்துடன் வாழவேண்டும் என்று உபதேசித்த கடுவெளிச்சித்தர் அறிவுரை புகட்டுகின்றார். கடுவெளிச்சித்தர் பாடலில் இத்தகைய சிறந்த நீதிகளையும், ஒழுக்க முறையையும், அறிவுரையையும் எடுத்துக் குறிப்பிடுகிறார். கடுவெளிச் சித்தர் பாடல் தன் மனத்துக்கு உரைப்பதுபோலப் பாடியதாகும்.

**உடம்பின் நிலையாமை:**

சித்தர்கள் உடம்பை, மாயம், பொய் என்று கருதி அதைப் பேணாமல் விடவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் அல்லர். உடம்பு என்பது உண்மையானது ஆகும். ஆதலால் அதைப் பாதுகாத்து நீண்டநாள் வைத்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த உண்மையை வாலைக்கும்மியில் காணலாம்.

**"ஊத்தைச் சடலம் என்று எண்ணாதேஇது**
**உப்பிட்ட பாண்டம் என்று எண்ணாதே!**
**பார்த்த பேருக்கு ஊத்தை இல்லைஇதைப்**
**பார்த்துக் கொள் உன்தன் உடலுக்குள்ளே". (சி.பா – 24)**

இது துர்நாற்றம் வீசும் உடம்பு என்று நினைக்காதே, உப்பிட்ட பாத்திரம் போல் உளுத்துக் கொட்டிவிடும் என்றும் நினைக்காதே. இவ்வுடம்பை நன்றாகப் பாதுகாத்த பேருக்கு இது ஊத்தைச் சடலம் அன்று, உப்பிட்ட பாத்திரமும் அன்று. உன் உடம்புக் குள்ளேயே இதை நீ நன்றாகப் பார்த்துக்கொள்".என்று உடம்பின் உண்மையைக் குறிப்பிடுகிறார். உடம்பு பொய்யென் போருக்கு மறுப்புரை கூறினர். இவ்வுடம்பைப் பாதுகாப்பது எப்படி என்பதையும் வாலைக்கும்மி குறிப்பிடுகிறது.

**உடம்பைப் பாதுகாக்கும் வழி:**

நமது முதுகுத்தண்டுக்கு மேலே உச்சியிலே, உள் நாக்குக்கு மேலே அறிவு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. யோகப் பயிற்சியால் தான் அதைக் உணரமுடியும். அதை உணர்ந்தால் கவலையின்றி ஆனந்தமாக வாழலாம். உடலுக்கும் அழிவில்லை. இதைக் காண்பதற்குப் பலமுறைகள் கூறுகின்றனர். இவ்வாறு நமது சிரசில் இருப்பதைத் தான் மேல் வீடு என்றும் சொல்லுகின்றனர். இதனை,

**"உச்சிக்கு நேரே உள்நாவுக்கு மேல்நிதம்**
**வச்சவிளக்கு எரியுதடி.**
**அச்சுள்ள விளக்குவாலையடி அவி**
**யாம்லெரியதுவாலைப்பெண்ணே!" ( சி. பா – 25)**

என்றும் வாலைக் கும்மி பாடுகிறது. என்று உடம்பைப் பாதுகாக்கும் வழி பற்றி கொங்கணர்ச் சித்தர் குறிப்பிடுகிறார்.

**சித்திகள்:**

சித்தர்கள் என்பவர் சாகாநிலையைப் பெற்றவர்கள் ஆவார். அழியாத உடம்பைப் பெற்றவர்கள், உடம்பை அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழியை அறிந்தவர்கள். தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து நடமாடும் சக்தி

படைத்தவர்கள். இதற்குக் கூடுவிட்டுக்கூடு பாய்தல் என்று பெயர். சித்தர்களுக்கு வான மார்க்கமாகச் செல்லும் சக்தியும் உண்டு. முக்காலங்களைப் பற்றி அறியும் ஞானமும் உண்டு. பலவிதமான அற்புதங்களைச் செய்யும் ஆற்றலும் உண்டு என்று குறிப்பிடுகிறது.

யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள், சித்தி பெற்றவர்கள் சித்தர்கள் என்று பெயர் பெற்றனர் என்பர்.

சித்திகள் எட்டுவகை. அவை: அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம்,வசித்துவம், என்பனவாகும்.

* அணுவைக் காட்டிலும் மிகவும் சிறிய உருவிலே உலவும் ஆற்றலுக்கு அணிமா என்று பெயர்.
* மலையினும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றலுக்கும் மகிமா என்று பெயர்.
* உடம்பைக் கனமாக இல்லாமல் இலேசாகச் செய்து கொள்ளுதலும், நீரிலும், சேற்றிலும் அழுந்தாமல் காற்றுப்போல் விரைந்து செல்லும் வல்லமையைப் பெறுவதும் லகிமா ஆகும்.
* தான் எதை நினைத்தாலும் நினைத்த வைகளை அடையும் வல்லமைக்குப் பிராத்தி என்று பெயர்.
* தன் நினைப்பின் வல்லமையால் எல்லாவற்றையும் படைக்கும் சக்திக்குப் பிராகாமியம் என்று பெயர்.
* எல்லாரும் தன்னை வணங்கும்படியான தெய்வத்தன்மையை அடைவது ஈசத்துவம் என்று சொல்லப்படும்.
* உலகம் முழுவதையும் தன்வசப்படுத்தி நடத்தும் ஆற்றலை அடைந்திருப்பதற்கு வசித்துவம் என்றுபெயர்.
* ஐம்புலன்கள் நுகரும் இன்பதுன்பங்களைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பது கரிமா என்று சொல்லப்படும்.

இவைகளே எண்வகைச் சித்திகளாகும். இவைகளை அட்டமா சித்தி என்பர். இவ்வெண்வகைச் சித்திகளையும் பெற்றவர்களையே சித்தர்கள் என்பர். இவ்வெட்டு வகை வல்லமைகளையும் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர். சித்தை உடையவர்கன் சித்தர்கள் என்பர். அறிவுபடைத்தவர்கள் சித்தர்கள் ஆவர். சித்தம் என்பதற்கு அறிவு என்றும் பொருள் உண்டு. ஆகவே சித்தர்கள் என்றால் அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள், மெய்ஞ்ஞானிகள் என்று குறிப்பிடுவர்.

**மருந்துவத்தின் சிறப்பு:**

மருந்து இருவகைப்படும். அவை அகமருந்து, புறமருந்து என்பன. அகமருந்து என்பது,

உள்ளுக்குச் சாப்பிடுவதும், புறமருந்து என்பது உடலின் மேல் பூச்சாக உபயோகிப்பதும் ஆகும். மருந்து உடலில் உண்டாகும் நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுகிறது.மேற்கண்ட மருந்துகள் மருத்துவர்களால் கையாளப்படுகின்ற முறைகளாகும். மனிதனுக்கு ஏற்படுகின்ற எல்லா இடையூறுகளுக்கும், சஞ்சலத்திற்கும், பிணிகளுக்கும், எண்ணிய எண்ணங்களை எல்லாம் முடிப்பதற்கும், அதாவது நிறைவேற்றுவதற்கும் சித்த வித்தையாகிய மருந்து பயன்படுகிறது. சித்த வித்தையாகிய சாகாக் கல்வியாகும். திருவருட்பிரகாச வள்ளலார் கூறுகிறார். வள்ளலார் திருவருட்பா கீர்த்தனையில் "நல்ல மருந்தும் மருந்து சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து" என்னும் பாடலில் கூறுகிறார்.

**அருள்வடிவான மருந்து:**

அருளைப் பெறுவதற்குக் காரணமாகஇருந்ததினால் இதற்கு "அருள் வடிவான மருந்து'' என்று கூறுகிறார். அதாவது அன்பின் வழிச்சென்று, அருள் என்னும் பூட்டைத் திறப்பதற்கு ஜீவகாருண்யம் என்கிற திறவுகோல் தேவைப்படுகிறது. அது ஜீவகாருண்யம் என்கிற சாகாக் கல்வியான "சித்த வித்தை" யாகும்.

**சஞ்சலந்தீர்க்கும் மருந்து:**

மனம் சஞ்சலப்பட்டுக் கஷ்டப்படும்போது மனம் ஆறுதலடைய கோயில்களுக்குச் சென்று தெய்வத்தை நினைந்து தியானிக்கும்போது மனம் ஒருமைப் படுகிறது. இது உலக வழக்கம்ஆகும். சாகாக் கல்வி மூலம் மனத்தை ஒருமுகப்படுத்தி இருந்த இடத்திலேயே தியானிக்கும்போது மனம் அமைதியடைய ஆரம்பிக்கின்றது. அப்போது சஞ்சலம் என்கிற கஷ்டம் நீங்குகிறது.

**அஞ்சலென்றாளும் மருந்து:**

அஞ்சல் என்றால் பயப்படுவது என்று பொருள். இங்குப் பயப்படாதே என்று ஆட்கொள்ளும் மருந்து என்பது பொருள்படுகிறது. சாகக் கல்வியைப் பயிலும் ஒருவனுக்கு எத்தகைய துன்பம் நேரிடும் போதும் யாரவது ஒருவன் தீங்கு செய்ய நினைத்துத் தொடும் போதும் தொட்டவன் கண்டம் இரண்டு துண்டாசிவிடும் என்று குறிப்பிடுகிறது.

**பிறப்பை ஒழிக்கும் மருந்து:**

சமாதி நிலையை அடைந்து அதன் காரணமாக மறுபடியும் பிறக்கும் தன்மையோ, இறக்கும் தன்மையோ, இல்லாமல் ஒழிக்கும் தன்மையுள்ள மருந்து தான் சித்த வித்தையாகும்.

**சித்தவித்தைகள்**

**"சின்மய வடிவங்காட்டி சிவானந்த அமிர்த மூட்டி**
**ஜீவன்தனை மேலே ஏற்றி ஜெகவொளியைத் தன்னுள்ளே காட்டி,**
**ஜெகமுய்ய வந்தாய் போற்றி சிவானந்த குருவே போற்றி.'**

சித்த வித்தை என்றால் பிராணாயாமமாகிய உயர்ப்பயிற்சியேயாகும். அதாவது புருவமையத்திலிருந்து உதயமாகும் உயிர், அது உதித்த இடத்திலேயே சேர்க்கும்படியான

பயிற்சிக்குத்தான் “சித்த வித்தை “ என்பதாகும். இதற்குப் பல பெயர்கள் உள்ளன. சித்த வித்தை என்பது வாயு என்னும் வாசி, மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டே இருப்பது இயற்கையாகும். அது மூக்கின் வழியாக வெளியினுள்ளில் போய் அழிவதைத் தடுத்து அண்ணாக்கின் மேல் இருபுறங்களிலுள்ளதுமான இடப்பக்கத்திலும், வலப்பக்கத்திலும் உள்ள வழியாக நேராக உள்ளே புருவமையத்திற்கு ஏற்றி உள்ளுக்குள்ளே நடமாடச் செய்வதே சித்த வித்தை பயிற்சியாகும்..

**பிரணவம்:**

இது சமஸ்கிருதச் சொல்லாகும். இது ஓம் என்கிற சொல்லைக் குறிப்பிடுவதாகும். பிராணன் + நவம்=பிரணவம். பிரா என்றால் பிரகாசம், நவம் என்றால்ஒன்பது. அதாவது ஒன்பது வாயில்கள் உள்ளன. இந்த துவாரங்கள் வழியாக வெளியினுள்ளில் செல்லும் பிராணனை அப்படிச் செல்லவிடாமல் உள்வழியே கூடி நடத்திச் செல்வதே பிரணவமாகும்.

**சாகாக்கல்வி:**

இது திருவருட்பிரகாச வள்ளலார் கொடுத்த பெயராகும். இது திருவருட்பாவில் குறிப்பிடுகிறது. இப்போது வெளியில் படிக்கும் புத்தகப் படிப்பெல்லாம் சாகும் கல்வியாகும். எவ்வளவுதான் சாஸ்த்திரங்களைப் படித்தாலும் பட்டங்களை பெற்றாலும் கடைசியில் செத்து தான் போகிறார்கள். வாயுவெளியில் செல்லாமல் மேல்நோக்கி அதாவது புருவமையத்தை நோக்கிப் படிக்கிற வித்தை "சாகாக்கல்வி" என்றுபெயர். இப்படிப்புப் படிக்கின்றவர்களுக்கு ஜீவசமாதி நிலை நிச்சயமாகக் கிடைக்கும்.

**பிராணாயாமம்:**

பிராணன் என்றால் உயிர். ஆயாமம் என்றால் தடுத்து நிறுத்துதல் என்று பொருள். நம்முள்ளில் இருக்கின்ற பிராணன் அபானனாய் நவத்துவாரங்களின் வழியாய் வெளியில்போய் அழியாமல் உள்ளிலேயே தடுத்து நிறுத்துவதற்குப் பிராணாயாமம் என்றுபொருள்.

**வாசியோகம்**

ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவை அதன் அதன் உற்பத்தி ஸ்தானமாகிய புருவமையத்தில் சலனமில்லாமல் இருக்கச் செய்கிற நிலைக்குக் கொண்டு போகிற பயிற்சிக்கு வாசியோகம் என்று பெயர். யோகம் என்றால் சேர்ப்பது என்பது பொருள்.

**ஆறு ஆதாரங்கள்:**

ஆறு ஆதாரங்கள் என்பவை உயிரைப் பற்றியவைகள் என்பதை முதலில் தெரிந்துக் கொள்ள வேண்டும். ஆனால் உலகத்தில் மூலாதாரம் என்பது நம் அடிவயிற்றின் கீழ் தொடைகள் சேரும் இடத்தில், வயிற்றுக்குள்ளே முதுகுத்தண்டுக்கு முன்னாள், மத்தியில் முக்கோண வடிவில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு மேல் 2 ½ அங்குலத்திற்கு தூரத்திற்கு இடைவெளியில், மேலும், மற்ற நான்கு ஆதாரங்களும் கடைசியாக ஆக்ஞை என்பது புருவ மத்தியிலிருப்பதாக முடிக்கின்றனர். சிலர் இவற்றை கீழ் ஆதாரங்கள் என்று குறிப்பிடுகிறார்கள். உண்மையில்

மேலிருந்து தான் கீழ்நோக்கி வருகின்றன. நமது உடலில் 72000 நாடிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் பத்து முக்கிய நாடிகளாகும். இந்தப் பத்து நாடிகளுள் மூன்று நாடிகள் மிக முக்கியமானவைகளாகும். அவை இடகலை, பிங்கலை, சூட்சமநாடி என்பன. அதாவது சந்திரகலை நாடி, சூரிய கலை நாடி, சூட்சும நாடி எனும் அக்கினி நாடி என்பனவாகும். இந்த அக்கினி நாடியைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. அதாவது "சூட்சுமத்திலிருக்கிறது மோட்சம்" என்பார்கள்.

**மூலாதாரம்:**

அகங்காரம் தனது உற்பத்தி ஸ்தானமான மனத்தில் சேரும்போது வெளியில் சங்கல்ப்பிக்கின்றதற்கோ, தனியாய் அறிவதற்கோ, தெரிவதற்கோ, மனத்திற்கு முடிவதில்லை. இது மனத்தின் சொப்பன நிலைமையாகும். இதற்கு மூலாதாரம் என்று பெயர்.

**சுவாதிஷ்டானம்:**

இது மனத்தின் சுழுத்தி அதாவது தூக்கமாகும். எப்பொழுது அகங்காரம் மனத்தில் அடங்குகின்றதோ அப்பொழுது மனத்திற்குத் தொழில் இல்லாமல் தன்னுடைய சொந்த ஸ்தானத்தில் பிரவேசிக்கின்ற சமயம் ஆகும். இந்த நிலைமைக்கு மனத்தின் சுழுத்தியாகிறது. இதற்கு சுவாதிஷ்டானம் என்கிற நிலைமை.

**மணிபூரகம்**

இது அகங்காரம் மனதில் சேருகின்ற சமயத்தில் உண்டாகும் மூன்றாவது நிலையாகும். மணிபூரகம் என்பது மனதின் ஜாக்கிரதை நிலைமையாகின்றது. மணி என்பது மனம். பூரகம் என்பது நிறைப்பது. அப்பொழுது மணியாய் இருக்கின்ற மனம் வேறொன்றும் இல்லாமல் ஜீவனோடு சேர்ந்து தானாகி நிற்கின்றது. அப்பொழுது அங்கு மிகவும் பிரகாசமாய் ஜொலிக்கின்றது. இந்த நிலைமைக்கு மணிபூரகம் என்று பெயர்.

**அனாகதம்:**

இது மனத்தில் அகங்காரம் சேர்ந்த போது உண்டான மூன்றுநிலைமைகள் போன்று மனம் தனது உற்பத்தி ஸ்தானமான ஜீவனில் சேரும்போது உண்டாகின்ற நிலைமைகளுக்கு அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று பெயர். அதாவது ஜீவனுடைய சொப்பனம், சுழுத்தி, ஜாக்கிரதையாகும். இதற்கு அனாகதம் என்று பெயர்.

**விசுத்தி:**

விசுத்தி என்பது வி என்றால் விசேஷம், அதாவது அறிவு ஆகும். சுத்தி என்றால் நிர்மலம் என்று பொருள்படும். அதாவது சலனமில்லாமல் ஜீவன் மட்டும் இருக்கின்ற நிலைமை ஆகும். இந்த நிலைமைக்கு ஜீவனுடைய விசுத்தி என்கிற நிலையாகும்.

**ஆக்ஞை:**

ஆக்ஞை என்பது ஜீவன் சிவனாகி உற்பத்தி ஸ்தானமாய் இருக்கின்ற ஆனந்தத்தில் இலயித்து மற்றொன்றும் இல்லாமல் ஆனந்தித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையாகும்.

**முடிவுரை**

சித்தர்கள் கண்ட ஞானமும் சித்தியும் என்ற தலைப்பின் மூலம் புத்தகத்தின் போதனை முதல் மெய்ப்பொருளின் நிலை, ஞானத்தின் சிறப்பு, உடலின் நிலையாமை, சித்திகள், சித்த வித்தைகள் மற்றும் ஆறு ஆதாரங்கள் வரை இவ்வாய்வின் மூலம் அறிந்துக்கொண்டோம்.

**துணைநூற்ப்பட்டியல்**

**முதன்மைஆதாரம்**

1. சாமி. சிதம்பரனார்- சித்தர்கள்கண்டவிஞ்ஞானம்தத்துவம்
   தாமரைபப்ளிகேஷன்ஸ் (பி) லிட்
   41-பி, சிட்கோஇண்டஸ்ட்ரியல்எஸ்டேட்
   அம்பத்தூர், சென்னை–600 098.
   முதல்பதிப்பு – டிசம்பர், 2003.

**துணைமை ஆதாரம்**

1. த. கோவேந்தன் - சித்தர்பாடல்கள் பாவைபப்ளிகேஷன்ஸ், 142, ஜானிஜான்கான்சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
   முதல்பதிப்பு – டிசம்பர் 2000.
2. டாக்டர்ஏ. ஆர். சாரங்கபாணி - சித்தநெறி
   மணிவாசகர்பதிப்பகம், 31,சிங்கர்தெரு, பாரிமுனை,
   சென்னை – 600 108.
   முதல்பதிப்பு – பிப்ரவரி, 1997.